செய்தி வெளியீடு எண்–597 நாள் 24.07.2008

# செய்தி வெளியீடு

## மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளட்சித்துறை அமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (24.7.2008) ஆவின் ஊழியர்கள் மற்றும் பால் உற்பத்தியளார்களின் குழந்தைகளுக்கு மடிக்கணினி வழங்கி, ஆவின் புரோபயோடிக் தயிரை அறிமுகப்படுத்தினார்

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் பால்வளத்துறை சார்பாக தலைமைச்செயலகத்தில் இன்று (24.07.2008) நடைபெற்ற நிகழ்ச்சியில் +2 தேர்வில் அதிக மதிப்பெண் பெற்று சிறப்பாக தேர்ச்சி பெற்ற 9 ஆவின் ஊழியர்களின் குழந்தைகளுக்கும் மற்றும் 17 பால் உற்பத்தியாளர்களின் குழந்தைகளுக்கும் மடிக்கணினி வழங்கி, ஆவின் புதிய தயாரிப்பான புரோபயோடிக் தயிரை அறிமுகப்படுத்தினார். இந்நிகழ்ச்சியின்போது மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு உ. மதிவாணன் அவர்கள் முன்னிலை வகித்தார்கள். அறிமுகம் செய்யப்பட்ட புரோபயோடிக் தயிரை தலைமைச் செயலாளர் திரு.எல்.கே.திரிபாதி, இ.ஆ.ப. அவர்கள் பெற்றுக்கொண்டார்.

## அதிக மதிப்பெண்கள் பெற்ற குழந்தைகளுக்கு மடிக்கணினி

பால்வளத்துறையின் 2008-09ம் ஆண்டிற்கான மானியக்கோரிக்கையில் சட்டமன்றத்தில் பால்வளத்துறை அமைச்சர் அவர்கள் இணையம் / மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியப் பணியாளர்கள் மற்றும் பால் உற்பத்தியாளர்களின் குழந்தைகள் பயன்பெறும் வகையில் கீழ்கண்ட அறிவிப்புக்களை வெளியிட்டார்கள்.

மாநில அளவில் +2 தேர்வில் அதிக மதிப்பெண்கள் (ஸ்டேட் ரேங்க்) பெறும் இணையம் / மாவட்ட ஒன்றியங்களின் பணியாளர்கள் மற்றும் பால் உற்பத்தியாளர்களின் குழந்தைகளில் ஒரு ஆண் மற்றும் ஒரு பெண் குழந்தைக்கு 5 ஆண்டுகள் அல்லது அவர்களது படிப்புக்காலம் இதில் எது குறைவோ அதுவரை மாதம் ரூபாய் 1000/- வீதம் கல்வித் தொகையாக வழங்கப்படும் என்றும், மாநில அளவில் +2 தேர்வில் அதிக மதிப்பெண் பெறும் இணையம் மற்றும் மாவட்ட ஒன்றியப் பணியாளர்களின் குழந்தைகளில் 5 ஆண் மற்றும் 5 பெண் குழந்தைகள் ஒவ்வொருவருக்கும் ஒரு மடிக்கணினி வழங்கப்படும் என்றும் மற்றும் 17 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தைச்

சார்ந்த, பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களுக்கு பால் வழங்கும் உறுப்பினர்களின் குழந்தைகளில் +2 தேர்வில் அதிக மதிப்பெண் பெறும் 17 குழந்தைகளுக்கு கணினி வழங்கப்படும் என்ற மகிழ்ச்சியான அறிவிப்பை வெளியிட்டார்.

இதன்படி கடந்த 26.6.2008 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இந்த ஆண்டு மாநிலத்தில் +2 தேர்வில் முதலிடம் பெற்ற ஆவின் ஊழியர் திரு வெ. மணி அவர்களின் மகன் ம. ராஜேஷ்மார் என்ற மாணவனுக்கு மடிக்கணினியும் முதலாண்டு படிப்பு செலவிற்கான உதவித்தொகையாக ருபாய் 12,000/-ம் தலைமைச்செயலகத்தில் வழங்கினார்கள்.

இதன் தொடர்ச்சியாக இன்று (24.07.2008) மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆவின் ஊழியர்களின் 5 பெண் குழந்தைகள், 4 ஆண்குழந்தைகள் மற்றும் 17 மாவட்ட பால் உற்பத்தியாளர்களின் குழந்தைகள் ஆக மொத்தம் 26 மாணவ–மாணவிகளுக்கு மடிக்கணினி வழங்கினார்கள். மடிக்கணினி பெற்ற மாணவ மாணவர்களின் பெற்றோர்கள் இத்திட்டம் குழந்தைகளின் கல்வித்திறனை ஊக்குவிக்கும் என மகிழ்ச்சியுடன் பாராட்டினார்கள். மேலும் தமிழக அரசின் இந்த மகத்தான திட்டத்திற்கு ஆவின் ஊழியர்களும் பால் உற்பத்தியாளர்களும் தங்களது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொண்டார்கள்.

## “புரோபயோடிக் தயிர்” அறிமுகம்

ஆவின் நிறுவனம் பால் மற்றும் பால்பொருட்கள் விற்பனையில் சாதனை படைத்து வருகிறது. தற்பொழுது ஆவின் பால் பவுடர், பாலாடைக்கட்டி, நறுமணப்பால், யோகர்ட், பன்னீர், தயிர், மோர், நெய், வெண்ணெய், ஐஸ்கிரீம் வகைகள், பால்கோவா, மைசூர்பா, குளோப்ஜாமுன் போன்ற பல்வேறு வகையான பால் உபபொருட்களை நுகர்வோர்கள் தேவைக்கேற்ப தயாரித்து விற்பனை செய்து வருகிறது.

மாறிவரும் சூழ்நிலைக்கேற்ப நுகர்வோர்களின் தேவையின் அடிப்படையில் புதிய பால் உபபொருட்களை தயாரித்து விற்பனை செய்துவரும் ஆவின் புதிய பால்பொருளான “புரோபயோடிக் தயிர்”ஐ தயாரித்துள்ளது.

“புரோபயோடிக்’’ என்றால் நலமான வாழ்க்கை என்று பொருள். உடலில் உள்ள ஜீரண மண்டலத்தில் அதிக அமிலத்தன்மை இருந்தாலும் புரோபயோடிக் தயிர் உபயோகித்தால் நன்மை பயக்கும் நுண்ணுயிர்களின் எண்ணிக்கை பாதிக்காமல் இருக்கும்.

புரோபயோடிக் நுண்ணுயிர்கள் மனித உடல் சார்ந்துள்ளதால் இந்தத் தயிர் அனைத்து வயதினருக்கும் முக்கியமாக ஜீரண மண்டல சம்பந்தமான நோய் உள்ளவர்களுக்கும் ஏற்றதாகும். புரோபயோடிக் தயிரை உபயோகிப்பதால் ––

- இரத்தத்தில் உள்ள “கொலஸ்ட்ரால்” அளவைக் கட்டுப்படுத்தலாம்
- சுலபமாக ஜீரணிக்கக் கூடியது,
- உடலில் எதிர்ப்பு சக்தியை கூட்டுகிறது,
- குடல் சம்பந்தமான நோய்கள் வராமல் தடுக்கப்படுகிறது.
- “சீதபேதி” என்ற வயிறு சம்பந்தமான நோயைக்கட்டுப்படுத்துகிறது.

இன்று அறிமுகப்படுத்தப்படவுள்ள 100 கிராம் “புரோபயோட்டிக்” தயிரில் 63.5 கலோரியும் 1.5 கிராம் கொழுப்புச் சத்தும், 4.5 கிராம் புரதச்சத்தும், 6.9 கிராம் மாவுச்சத்தும் 0.9 கிராம் தாதுச்சத்தும் உள்ளன. புரோபயோடிக் தயிர் 200 கிராமின் விலை ரூ.15.00 மட்டுமே.

இந்நிகழ்ச்சியில் கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை முதன்மைச் செயலர் செல்வி லீனா நாயர், இ.ஆ.ப., பால்வளத் துறை ஆணையர் மற்றும் ஆவின் நிர்வாக இயக்குநர் திரு.அபூர்வவர்மா, இ.ஆ.ப., இணைச்செயலர் திரு கே.எஸ்.முத்துசுவாமி,இ.ஆ.ப., துணைப்பால் ஆணையர் திரு எம்.ரவிக்குமார் ஆவின் இணை நிர்வாக இயக்குநர் டாக்டர் என். சுப்பையன், மற்றும் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

வெளியீடு– இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.